தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060
9443699066

admin@dhinakani.com

நமது

# தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

RNI-TNTAM/2023/88253




| Vol: 03 | Issue: 249 | 4 Pages | 17.07.2026 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 249 | 4 பக்கங்கள் | 17.07.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்**
**மேவார் இலாஅக் கடை**

**விளக்கம்:** பொருள் இல்லை என்று இரந்து அதைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் இல்லாதபோது,பொருள்கொடுப்பவரிடத்தில் என்ன புகழ் உண்டாகும்?


## வடசென்னை ராயபுரம் தனியார் திருமண மண்டபத்தில் தமிழக வெற்றி கழகம் வடக்கு தெற்கு மாவட்ட தொண்டர் அணி சார்பாக வேலை வாய்ப்பு முகாம்



வடசென்னை ராயபுரம் தனியார் திருமண மண்டபத்தில் தமிழக வெற்றி கழகம் வடக்கு தெற்கு மாவட்ட தொண்டர்அணி சார்பாக வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது இதனை எம்எல்ஏ துவக்கி வைத்தார்

சென்னை ராயபுரம் மரகதம் திருமண மாளிகையில் தமிழக முதல்வர் ஆணைக்கிணங்க நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த் வழிகாட்டுதலின்படி தமிழக வெற்றி கழகத்தின் மற்றும் மேஜிக் பஸ் சென்னை வடக்கு தெற்கு தெற்கு மாவட்ட தொண்டரணி ராயபுரம் சார்பில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது வேலைவாய்ப்பு முகாமை மாவட்ட செயலாளர்கட்பீஸ் விஜயராகவன் மற்றும் ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் விஜயதாமுதுவக்கி வைத்தார். இளைஞர் ஒருவருக்கு மாவட்ட செயலாளர் மற்றும் எம்எல்ஏ பணி ஆணை வழங்கினார். முத்தூட் பைனான்ஸ், ஸ்டேட் பாங்க், எல்ஐசி, ஏபிடி மாருதி, ஏசியன் லிப்டன் எஸ்கலேட்டர் பிரைவேட் லிமிடெட் ஆதவன் கார்ப்பரேட் கம்பெனி, hd bfc, வொர்க் பிரிக்ஸ், இன்போ சர்ச், சினிமாஸ் பிவிஆர் ஐநாக்ஸ் சினிமாஸ், இந்தியா மேட்ப்ளஸ், மகேந்திரா பிக் பாஸ் கேட் உள்ளிட்ட நிறுவனங்கள் வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு வேலைக்கு ஆட்களை எடுத்தனர் வேலை வாய்ப்பு முகாமில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளம் பெண்கள் மற்றும்இளைஞர்கள்ராயபுரம்வண்ணாரப்பேட்டைகொருக்குப்பேட்டை திருவொற்றியூர் மீஞ்சூர்,பொன்னேரி, கொளத்தூர் தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் கலந்து கொண்டனர் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாவட்ட அமைப்பாளர் தொண்டரணி விக்னேஷ் செய்திருந்தார் இந்நிகழ்ச்சியில் தொண்டரணி நிர்வாகிகள் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள்வட்டக்கழகநிர்வாகிகள்சார்புஅணிநிர்வாகிகள்பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

## திருத்தணி முருகன் கோயில் அடிவார குடியிருப்பில் பதுங்கிய 10 அடி மலைப்பாம்பு... 2வது நாள் தேடலில் தீயணைப்பு வீரர்கள் லாவகமாக பிடித்தனர்



திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி முருகன் கோயில் மலை அடிவாரத்தில் உள்ள நாவிதர் தெரு குடியிருப்பு பகுதியில் சுமார் 10 அடி நீளமுள்ள மலைப்பாம்பு பதுங்கியிரு ந்தது அப்பகுதி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. முருகன் கோயில் மலைச்சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், மலைப்பகுதியில் இருந்து பாம்பு குடியிருப்பு பகுதிக்குள் வந்திருக்கலாம் என கூறப்படுகிறது. பொதுமக்கள் தகவலின் பேரில் முதல் நாளில் சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் படை வீரர்கள் நீண்ட நேரம் தேடியும் பாம்பை கண்டுபிடிக்க முடியாததால், அங்கு மலைப்பாம்பு இல்லை என கருதி திரும்பிச் சென்றனர். ஆனால், இரண்டாவது நாளும் அதே பகுதியில் மலைப்பாம்பு பதுங்கியிருப்பதை குடியிருப்புவாசிகள் உறுதியாக தெரிவித்ததைத் தொடர்ந்து, மீண்டும் விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக தேடுதல் நடத்தினர். அப்போது அதே பகுதியில் மறைந்திருந்த 10 அடி நீளமுள்ள மலைப்பாம்பை லாவகமாகப் பிடித்து பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர்.

இதனால் அப்பகுதி மக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர். மலைப்பாம்பை தீயணைப்பு வீரர்கள் பிடிக்கும் காட்சியை பொதுமக்கள் செல்போனில் பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ள நிலையில், அந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

# குழந்தைகள் பாதுகாப்பு சேவை பணியாளர்களுக்கு நிலுவை ஊதியத்தை உடனே வழங்க வேண்டும்: உதயநிதி ஸ்டாலின்

சென்னை,

எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

குழந்தைகள் நலனுக் கான(Childline) (1098) அமைப்பின் பணியாளர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்கப்பட வில்லை என்ற குற்றச்சாட்டு பரவ லாக எழுந்துள்ளது. ஊதியம் இல் லாத நிலையில் குழந்தைகள் பாதுகாப்பு சேவை பணியாளர்கள் சிலர் தங்கள் வாழ்வாதாரத் தைப்

பாதுகாக்க இரவு நேரங்க ளில் மாற்று வேலைக ளுக்கு செல்லக்கூடிய அவ லம் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.



இன்னும் சிலர் இந்த பணியே வேண்டாம் என விலகும் நிலைக்கும் தள் ளப்பட்டுள்ளனர். குழந் தைகளுக்கான பாது காப்பை உறுதி செய்யும் Childline அமைப்பு எவ்வளவு முக்கியமோ, அதே அளவு அதில் பணிபுரிவோ ரின் நலனும் முக்கியம்.

எனவே குழந்தைகள் பாதுகாப்பு சேவை பணியாளர்களின் ஊதியப் பிரச்சினையை தீர்த்து வைத்து, அவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரசு முன்வர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித் துள்ளார்.

## ஜூன் 18ஆம் தேதி இந்தியாவின் முதல் தனியார் ஆர்பிட்டல் ராக்கெட்



இந்தியாவின் முதல் தனியார் ஆர்பிட்டல் ராக்கெட் ஜூன் 18ஆம் தேதி ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருந்துவிண்ணில்ஏவப்பட உள்ளது: நாளை மறுநாள் பழவேற்காடு மீனவர்களுக்கு மீன் பிடிக்க திருவள்ளூர் மாவட்ட மீன்வளத்துறை தடை விதித்துள்ளது

ஆந்திர மாநிலம் ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருந்து இந்தியாவின் முதல் தனியார் ஆர்பிட்டல் ராக்கெட் விக்ரம் 1 ராக்கெட் விண்ணில் ஏவப்பட உள்ளது இந்தியா மற்றும் வெளிநாட்டு செயற்கைக்கோர்களை குறைந்த உயரபூமி சுற்று பாதையில் நிலை நிறுத்தும் பணியை மேற்கொள்ள உள்ளது இதனை முன்னிட்டு பழவேற்காடு மீனவர்கள் நாளை மறுநாள் ஜூலை பதினெட்டாம் தேதி கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என தடை விதிக்கப்பட்டுள்ளது ராக்கெட் ஏவப்படுவதால் பாதுகாப்பு கருவி மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதித்து திருவள்ளூர் மாவட்ட மீன்வளத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்

## சென்னை பெருங்குடியில் தனியார் விடுதி உரிமையாளர்கள் சங்கத்தினர் மண்டல அலுவலகத்தை முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது.



பெருங்குடியில் நூற்றுக்கும் மேற்பட்ட தங்கும் விடுதிகள் செயல்பட்டு வரும் நிலையில் கடந்த 10 ம் தேதி எம்சி.என்.நகர், முதல் தெருவில் உள்ள எஸ்.எஸ்.எல். மகளிர் விடுதிக்கு சென்னை மாநகராட்சி 184 வது வார்டு உதவி பொறியாளர் "நகர திட்டமிடல் அமலாக்கம் படிவம்1 என்ற கடிதத்தை அந்த இடத்திற்கு அனுப்பியுள்ளார். வீடுகளை வீடுகளாக மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனவும் விடுதிகளாக பயன்படுத்தக் கூடாது எனவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனைத் தொடர்ந்து அந்தந்த பகுதியில் உள்ள மண்டல அலுவலர்கள் வீடுகளாக மாற்றப்பட்டுள்ள விடுதிகளில் நோட்டீஸ்களை வழங்கி விளக்கம் கேட்டுள்ளனர். ஒரு கடிதத்தை அரசு அதிகாரிகள் அனுப்பும்போது இடத்தின் உரிமையாளர் பெயர் குறிப்பிடாமல் உரிமையாளர் & டெவோலோப்பர் என்று குறிப்பிட்டு அனுப்பியுள்ளனர் என்பது குறித்து தனியார் ஐடி உரிமையாளர்கள் சங்க மாநில தலைவர் சீத்தாராமன் தலைமையில் அதிகாரியை சந்தித்து கடிதம் அனுப்பியது குறித்து கேட்பதற்காக சென்றனர். அப்போது மண்டல அலுவலகத்தை முற்றுகையிட்டு அதிகாரியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தனியார் ஐடி விடுதி உரிமையாளர்கள் சங்க மாநில தலைவர் சீத்தாராமன் : குறிப்பிட்ட விடுதிகளுக்கு மட்டுமே நோட்டீஸ் அனுப்பப்ப ட்டு ள்ளதாகவும் இதற்கு அதிகாரிகள் விளக்கம் அளிக்க வேண்டும் எனவும்வலியுறுத்தினர். விடுதிகளில்நோட்டீஸ்ஒட்டப்பட்டதற்கு காரணம், அரசு அதிகாரிகள் தங்களிடம் கையூட்டு பெறவே என்றும் குற்றச்சாட்டினார். மேலும் முதல் நோட்டீஸ் அனுப்பியும் பதில் அளிக்கவில்லை என்றால் அடுத்த 7 நாட்களுக்குள் மீண்டும் 2வது நோட்டீஸ் அனுப்படும் அதற்கு பதில் அளிக்கவில்லை என்றால், அதன் பின்னர் 7 நாள் கழித்து மூன்றாவதாக ஒரு நோட்டீஸ் அனுப்படும்அடுத்த7நாட்களில்இடத்தைபூட்டிசீல்வைக்கப்படும் என்று அதிகாரி கூறினார். அப்படி அதிகாரி ஒரு இடத்தை பூட்டி சீல் வைத்தால் தமிழ்நாட்டில் உள்ள 20 ஆயிரம் விடுதிகளை நாங்கள் பூட்டி அதன் சாவிகளை தமிழ்நாடு முதலமைச்சரிடம் கொடுப்போம். 20 ஆயிரம் விடுதிகளில் தங்கியுள்ள சுமார் 20 லட்சம் பேர் வீதிக்கு வருவார்கள் அவர்களுக்கு உணவும், தங்க இடமும் 184 வது உதவி பொறியாளர் கொடுப்பாரா என்றும் கேள்வி எழுப்பினார். அடுத்த முறை நோட்டீஸ் ஒட்டப்பட்டால் சாலை மறியல் போராட்டத்தில் ஈடு பட போவதாகவும் விடுதி உரிமையாளர்கள் சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்தனர்.

## தரமற்ற உணவு, விலை உயர்வை கண்டித்து மாநிலக் கல்லூரி மாணவர்கள் போராட்டம்



சென்னை காமராஜர் சாலையில் உள்ள மாநிலக் கல்லூரியில், தரமற்ற உணவுகள் வழங்கப்படுவதாக குற்றம்சாட்டி மாணவர் கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்லூரி நிர்வாகம் உணவுப் பொருட்க ளின் விலையை உயர்த்தியுள்ளதுடன், மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்த பல்வேறு புகார்களுக்கு இது வரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் மாணவர்கள் குற்றம்சாட்டினர்.

மேலும், தங்களது கோரிக்கைகளை வலி யுறுத்தி போராட்டம் நடத்த இருப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து, நிர்வாகம் மற் றும் சில மாணவர்கள் தங்களுக்கு மிரட்டல் விடுப்பதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தில் தமிழக முதலமைச்சர் மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் உடன டியாக தலையிட்டு, மாணவர்களின் கோரிக் கைகளை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத் தினர்.

## ஆண்டிபட்டியில் காமராஜர் பிறந்தநாளை ஒட்டி தனியார் பள்ளி மாணவ மாணவிகள் கண்கவர் பேரணி



கல்வியின் அவசியத்தை வலியுறுத்திய பதாதைகளை ஏந்தி கோசமிட்டு அணிவகுத்து வந்து காமராஜர் சிலைக்கு மரியாதை

முன்னாள் முதல்வர் காமராஜரின் 124 வது பிறந்தநாள் தமிழக அரசு சார்பில் கல்விவளர்ச்சி நாளாக கொண்டாட ப்படுகிறது இதன் ஒருபகுதியாக அனைத்து பள்ளி கல்லூரிகளில் காமராசரின் பிறந்தநாள்விழா நடத்தப்பட்டு அதில் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தப்ப டுகிறது அதன் அடிப்படையில் தேனிமாவட்டம் ஆண்டிபட்டி கொண்ட மநாயக்கன்பட்டியில் உள்ள லிட்டில் பிளவர் மெட்ரிகுலேஷன் பள்ளியில் காமராஜரை 124 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது

விழாவிற்கு பள்ளிதாளாளர் ஹென்றி அருளானந்தம்தலைமைதாங்கிபேரணியை ஆண்டிபட்டி துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து துவக்கி வைத்தார்

முன்னதாக பள்ளிமுதல்வர் உமாமகே ஸ்வரி அனைவரையும் வரவேற்றார் பள்ளித்தாளாளர் மனைவி தமயந்தி பள்ளிச் செயலாளர் மேத்யூஜோயல் , சார்புஆய்வாளர் ரஞ்சித் ஆகியோர் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி பேசினார்கள்

பேரணி ஆண்டிபட்டி நகரின் முக்கிய வீதிகளின் வழியாக வந்து ஆண்டிபட்டி காமராஜர் சிலையில் முடிவடைந்தது

அங்கு காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது

காமராஜர் பிறந்தநாள் விழாவை ஒட்டி நடைபெற்ற பேரணி மற்றும் நிகழ்ச்சிகளில் ஏராளமான பள்ளி மாணவ மாணவிகளும் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்

## மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் உதவி இயக்குனர் நிலையில் உள்ள காலி பணியிடங்களை நிரப்பிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் உதவி இயக்குனர் நிலையில் உள்ள காலி பணியிடங்களை நிரப்பிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்: தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் உதவி இயக்குனர்,இணை இயக்குனர், கூடுதல் இயக்குனர்,பதவி உயர்வு ஆணைகளை வெளியிட்டு நீதி வழங்க கோரி மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உணவு இடைவேளையின்போது ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.கிளைத லைவர் ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் பத்மபாலாஜி,மாவட்ட துணை செயலாளர் ரஜினி,கிளை செயலாளர் சந்தோஷ்குமார் ஆகியோர் கண்டன உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து உதவி இயக்குனர் நிலையில் உள்ள காலி பணியிடங்களை நிரப்பிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர்இதில் நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்.

## "உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ்" மதுரை மாவட்டம், சேடபட்டி ஊராட்சி ஒன்றியம், மன்னப்புரம் ஊராட்சியைச் சேர்ந்த M.கல்லுப்பட்டி கிராமத்தில் செயல்பட்டு வரும் நியாய விலை கடையை (Ration Shop) நேரில் பார்வையிட்டு ஆய்வு



மதுரை மாவட்ட ஆட்சியர்திரு.நிஷாந்த்கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் (15.07.2026) "உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின்கீழ்"மதுரைமாவட்டம், சேடபட்டி ஊராட்சி ஒன்றியம், மன்னப்புரம் ஊராட்சியைச் சேர்ந்த M. கல்லுப்பட்டி கிராமத்தில் செயல்பட்டு வரும் நியாய விலை கடையை (Ration Shop) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, அங்காடியில் மொத்தம் ப திவு செய்யப்பட்டுள்ள 617 குடும்ப அட்டைதாரர்களுக்கு (Ration Card Holders) விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, சர்க்கரை மற்றும் கோதுமை ஆகியவற்றின் இருப்பு விவரங்களையும், அவற்றின் தரத்தினையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு செய்தார்.

மேலும், அட்டைதாரர்களுக்குப் பொருட்கள் தங்கு தடையின்றியும், சரியான எடையளவிலும் வழங்கப் ப டுகிறதா என்பதைப் பொதுமக்களிடம் கேட்டறிந்த ஆட்சியர், எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வகையில் விநியோகப் பணிகளைச் சீராக மேற்கொள்ள வேண்டும் என நியாய விலை கடைப் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

## உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் கள ஆய்வு







உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே

இ. ஆ. ப அவர்கள்தலைமையில்(15.7.2026)திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து துறை மாவட்ட அளவிலான மாவட்ட அலுவலர்களுடன் கள ஆய்வுக் கருத்துக்கள் மீது ஆய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் ஆய்வாளர் திரு. க. கார்த்திகேயன், இணைப்பதிவாளர் ( கூட்டுறவு சங்கங்கள்) திரு. பிரபு, இணை இயக்குனர்( வேளாண்மை) திரு. ஆதிசாமிமற்றும்அனைத்து துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு – பவானி சாலையில் மைய தடுப்புச் சுவர் அமைக்கும் பணி தீவிரம்



ஈரோடு, ஜூலை 17

ஈரோடு மாவட்டம் அசோகபுரம் – பவானி செல்லும் முக்கிய சாலையில் போக்குவரத்து பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் மையத் தடுப்புச் சுவர் (Concrete Median Barrier) அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கனரக வாகனங்கள் மற்றும் கிரேன் உதவியுடன் கான்கிரீட் தடுப்புகள் சாலையின் நடுப்பகுதியில் பொருத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பணியால் எதிரெதிர் திசையில் வரும் வாகனங்கள் தவறுதலாக மோதும் அபாயம் குறைவதுடன், போக்குவரத்து ஒழுங்கும் மேம்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பணிகள் நடைபெறும் பகுதிகளில் வாகன ஓட்டிகள் வேகத்தை கட்டுப்படுத்தி, போக்குவரத்து விதிகளை கடைப்பிடித்து,. பணியாளர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கவனமாக செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் நிறைவடைந்த பிறகு, அசோகபுரம் – பவானி சாலையில் விபத்துகள் குறைவதோடு, பொதுமக்கள் பாதுகாப்பாகவும் சீரான போக்குவரத்து வசதியுடனும் பயணிக்க முடியும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.



ஈரோடு மாவட்டம், தாளவாடி, அரேப்பாளையம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க தொகுப்பு பால் குளிரகத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



### தென்தாமரைக்குளம் எல் எம் எஸ் பள்ளியில்

## காமராஜர் பிறந்த தின கல்வி வளர்ச்சிநாள் கொண்டாட்டம்

தென்தாமரைகுளம் ஜூலை.17

தென்தாமரைகுளம் எல்.எம்.எஸ் மேல்நிலைப் பள்ளியில் காமராஜரின் 124 வது பிறந்த தின விழா கல்வி வளர்ச்சி நாளாக விமர்சையாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு பள்ளி தாளாளர் கால்வின் தலைமை வகித்து தலைமையுரையாற்றினார். பள்ளி தலைமை ஆசிரியை அனு ஜே ப்ரீத்தா முன்னிலை வகித்து சிறப்புரையாற்றினார். ஆசிரியை ஆன்லின் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் மாணவ மாணவிகளின் பேச்சு, பாடல், நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. காமராஜரின் பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முன்னதாக ஆசிரியை ஜான்சி ரீட்டா அனைவரையும் வரவேற்றார். ஆசிரிய செயலாளர் சாந்தி மார்கிரட் நன்றி கூறினார். நிறைவில் மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

### காஞ்சி காமகோடி சைல்ட் டிரஸ்ட் மருத்துவமனை

## குழந்தைகளுக்கான பல்துறை சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ் கிளினிக் தொடக்கம்.

சென்னை, ஜூலை 17,

காஞ்சி காமகோடி சைல்ட் டிரஸ்ட் மருத்துவமனை குழந்தைகளுக்கான சுவாச நோய் சிகிச்சை சேவைகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், சிறப்பு பல்துறை சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ் கிளினிக் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பட்ட நுரையீரல் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம், சிக்கலான சுவாச நோய்களால்பாதிக்கப்பட்டகுழந்தைகளுக்கு,நோயறிதல், சிகிச்சை மற்றும் நீண்டகால முழுமையான சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்படுகின்றன.

மருத்துவ இயக்குநர் டாக்டர் ஜனனி சங்கர் கூறுகையில், "

சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ் என்பது வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியான கண்காணிப்பும், பல்வேறு துறை நிபுணர்களின்ஒருங்கிணைந்த சிகிச்சையும் தேவைப்படும் நோயாகும். துரதிர்ஷ்டவசமாக, இந்தியாவில் தாமதமான நோயறிதல் இன்னும் பொதுவாக உள்ளது. பல குழந்தைகள், நுரையீரலில் நிரந்தர பாதிப்பு ஏற்பட்ட பிறகே எங்களிடம் வருகின்றனர். ஆரம்ப நிலையிலேயே நோயைக்கண்டறிந்து,முழுமையானசிகிச்சைஅளித்தால், நோயின் போக்கை குறிப்பிடத்தக்க வகையில் மாற்றி, குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை பெரிதும் மேம்படுத்த முடியும். எங்களது சிஸ்டிக் ஃபைப்ரோசிஸால் (சி. எஃப்)கிளினிக் தமிழ்நாட்டில் இரண்டாவது மையமாகும். முதலாவது CMC வேலூர் சி .எம்.சியில் செயல்படுகிறது என்றார்.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில்சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை (தடுப்பு, தடை மற்றும் நிவர்த்தி) சட்டம் 2013 குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி வகுப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் இ.ஆ.ப. அவர்கள் POSH விழிப்புணர்வு கையேடு, நிலையான இயக்கமுறை கையேடு மற்றும் விழிப்புணர்வு ஒட்டுவில்லைகளை வெளியிட்டார்கள்

## கோபி ஜெகன் மெட்டல் மார்ட் சார்பில் வைரவிழா பள்ளியில் காமராஜர் பிறந்தநாள் விழா




கோபி அருகே மொடச்சூரில் சுமார் 43 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் ஜெகன் மெட்டல் மார்ட் நிறுவனம் சார்பில் காமராஜர் பிறந்த நாள் விழா கோபி வைர விழா பள்ளியில், கல்விக் கண் திறப்பு விழா நாளாக கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு பள்ளியின் தலைவர் கே.எம்.வெங்கடேஸ்வரன் தலைமை தாங்கினார்.தாளாளர் கே.கே. தட்சிணாமூர்த்தி தொடக்க உரை ஆற்றினார். ஆட்சிக் குழு உறுப்பினர் கிரி என்கிற அருணாச்சலம், தேசிய நல்லாசிரியர் மன்சூர் அலி, ஜே.வி.அலுமினிய நிர்

வாக இயக்குனர் பிரேம் ஆகியோர் வாழ்த்தி பேசினார் கள். பள்ளியின் முன்னாள் மாணவரும், ஜெகன் மெட்டல்மார்ட் நிர்வாக இயக்குன ருமான பாலசிங் சிறப்புவிருந் |தினராக கலந்து கொண்டு நிறுவனத்தின் சார்பில் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் மதிப்புள்ள 55'இன்ச்', 2 இன்ட்ராக்டிவ் பிளாட் பேனல் டச் எல்.இ.டி. ஸ்மார்ட் டி.வி.களை பள்ளிக்கு வழங்கினார். காமராஜர் பற்றிய பேச்சு, பாடல் உள்பட பல் வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப் பட்டன. மேலும் விழா வில் போட்டியில்

வெற்றி பெற்ற பள்ளி மாண வர்கள் 3 பேருக்கு கல்லூரி சென்று படிப்பதற்கான செலவை ஜெகன் மெட்டல் மார்ட் நிர்வாக இயக்குனர் பாலசிங், விஜயா பவுண்டேசஷன் சார்பில் ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார். வைர விழா பள்ளியில் ரூ.75 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் கலை அரங்கத்துக்கு ஜே.வி. அலுமினியம் ரோலிங் மில்நிர்வாக இயக்குனரும்,விஜயா பவுண்டேஷன் நிர்வாக அறங்காவலருமான பிரேம், விஜயா பவுண்டேஷன் சார்பில் ரூ.1 லட்சத்துக்கான காசோலையை பள்ளி நிர்வாகிகளி டம் வழங்கினார். முன்னதாக தலைமை ஆசிரியர் சிவகுமார் வரவேற்றார்.

முடிவில் பள்ளி யின் பொறுப்பு தலைமை ஆசிரியர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## மயானத்தில் காற்று வாங்கும் புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகள்



நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட டபுள் ரோடு பகுதியில் உள்ள மயானத்தில் காட்டேரி, பால்காரன் லைன்,கிளண்டல்,டேன்டீ பகுதிகளை சேர்ந்த மக்கள் இங்குள்ள மயானத்தை தான் பயன்படுத்தி வருகின்றனர்.இந்த மயானம் நாளுக்கு நாள் முட்புதர்கள் சூழ்ந்து இருப்பதால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்ய வரும் நபர்கள் ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்ட உடல்களை எடுத்து வீசி விட்டு புதியதாக வந்த உடலை புகைத்து வருவதாக கூறப்படுகிறது. இதனால் வெளியே வீசப்பட்ட உடல்கள் எலும்புக் கூடுகளாக ஆங்காங்கு சிதறி கிடக்கிறது.இது போன்ற சூழல் ஏற்பட காரணம் குழி தோண்டும் தொழிலாளர்களா? அல்லது கரடிகளா? என தெரியாமல் மக்கள்குழப்பத்தில் உள்ளனர்.இந்த மயானத்தில் வெளியே வீசப்படும் எலும்பு கூடுகலால் துர்நாற்றம் வீசி வருவதுடன், மயானத்திற்கு வரும் மக்கள் மத்தியிலும் பீதியை ஏற்படுத்தியுள்ளது எனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இது குறித்து ஆய்வு செய்து மயான பகுதியை ஆக்கிரமித்துள்ள முட்புதர்களை அகற்றி வெளியே தூக்கி வீசப்பட்டுள்ள எலும்புக்கூடுகளை புதைத்து மக்களுக்கு அச்சம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




தேனி மாவட்டம், தேனி வட்டாட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடி தீர்வாக முழுப்புலத்திற்கான பட்டா ஆணையினை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் அவர்கள் உள்ளார்.

தின கனி
17.07.2026

# நாகர்கோவில் சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட வாலிபரின் உடலை வாங்க 4வது நாளாக மறுப்பு

## உறவினரிடம் தனிப்படை போலீசார் விசாரணை



நாகர்கோவில், ஜூலை. 17

கன்னியாகுமரியை அடுத்த சாமிதோப்பு, ஈத்தங்காடு பகுதியை சேர்ந்தவர் சபரிவர்மன் (33). மாற்று திறனாளியான அவரது கடையில் குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் விற்றதாக போலீசாரால் கைது செய்யப்பட்டார். கடந்த 13 ஆம் தேதி சிறையில் சபரிவர்மன் மயங்கி கிடந்ததாக அவரை குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் சபரிவர்மன் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். சபரிவர்மனை போலீசார் அடித்து கொலை செய்ததாக உறவினர்கள் குற்றசாட்டினர். மேலும் உடலை வாங்க மறுத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் போலீஸ் மாவட்ட எஸ்பி ஸ்டாலின் நேரில் விசாரித்தார். நாகர்கோவில் நீதிபதி சத்தியமூர்த்தி விசாரணை நடத்தினார். விசாரணையில் சபரிவர்மன் சிறைக்குள் வைத்து கொடூரமான முறையில் அடித்துக் கொலை செய்யப்பட்ட தகவல் தெரிந்தது.

நீதிபதி முன்னிலையில் நடைபெற்ற பிரேத பரிசோதனையில் சபரிவர்மனின் உடலில் 19 இடங்களில் காயங்கள் இருந்தது கண்டறியப்பட்டது. இது குறித்து வழக்கு பதிவு செய்து நாகர்கோவில் ஜெயில் வார்டன்கள் ஜெகன், சுரேஷ், சிவகுமார் ஆகிய 3 பேரை முதலில் கைது செய்தனர்.

தொடர் விசாரணையில் சபரிவர்மனை சிறை கைதிகள் 8 தாக்கியதும் தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட வார்டன்கள் 3 பேரும் கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டு நாங்குநேரி கிளை சிறையில் அடைக்கப்பட்டனர். சிறை கைதிகள் 8 பேரும் ஏற்கனவே நாகர்கோவில் ஜெயிலில் அடைக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்களை வேறு சிறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கபட்டு வருகிறது.

இந்த நிலையில் இறந்த சபரிவர்மன் குடும்பத்தினருக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என கேட்டு பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். மாவட்ட கலெக்டர் பிரதாப், போலீஸ் எஸ் பி ஸ்டாரின் ஆகியோர் சபரிவர்மன் வீட்டில் சென்று கோரிக்கைகளை அரசுக்கு தெரிவிப்பதாக ஆறுதல் கூறினர். இருப்பினும் அரசு நிர்வாகம் அறிவிக்கும் வரை சபரிவர்மன் உடலை பெற்றுக் கொள்ள மாட்டோம் என்று குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று 4ம் நாளாக மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் சபரி வருமானின் உடல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கொலை வழக்கு தொடர்பான விசாரணையை தீவிர படுத்த ஏ டி எஸ் பி கலையரசன் தனிமையில் தனி படை அமைக்கப்பட்டு விசாரணை விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# வலம்புரிவிளை குப்பை கிடங்கில் தீ பிடித்த 2 நாளில் அணைப்பு: மக்கள் நிம்மதி

நாகர்கோவில், ஜூலை. 17

நாகர்கோவில் வலம்புரிவிளை குப்பை கிடங்கில் 14ஆம் தேதி அதிகாலை 2 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டது. தீயணைக்கும் பணியில் மாவட்ட தீயணைப்பு அதிகாரி சத்தியகுமார் தலைமையில் உதவி மாவட்ட அதிகாரி துரை மேற்பார்வையில் 60 தீணைக்கும் வீரர்கள் முதல் நாளில் பணியில் ஈடுபட்டனர். மாநகராட்சி நிர்வாகம் சார்பில் பொக்லைன் இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டு குப்பைகள் கிளறி விடப்பட்டது. மேலும் தண்ணீரும் தேவைக்கு ஏற்ப வழங்கப்பட்டது. ஒரு கட்டத்தில் காற்றின் வேகம் அதிகரித்ததால் தீயின் வேகம் அதிகரித்தது. இதனால் தண்ணீர் தேவை அதிகரித்தது.

தொடர்ந்து நேற்று முன்தினம் 2வது நாளாக கூடுதலாக தீயணைப்பு வீரர்கள் வாழவைக்கப்பட்டனர். மொத்தம் 100 தீயணைப்பு வீரர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஒரு கட்டத்தில் பாதாள சாக்கடை மூலம் வரும் கழுவு நீர்சுத்திகரிப்பு பகுதியில் இருந்து தண்ணீர் பம்பிங் செய்து தீயணைக்கும் பணியில் வீரர்கள் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் மாலை தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, இரவு 8 மணிக்கு தீயை முற்றிலும் அணைத்தனர்.

இந்த நிலையில் நேற்று காலை குப்பை கிடங்கில் சில இடங்களில் இருந்து புகைகள் வெளியேறியது. உடனே மாநகராட்சி ஊழியர்கள் அந்த பகுதியில் தண்ணீர் பீச்சியடிக்கும் பணியில் ஈடுபட்டனர். அவர்களுடன் சில தீயணைப்பு வீரர்களும் புகைவரும் இடங்களில் தண்ணீர் அடிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வலம்புரிவிளை கிடங்கில் தீப்பிடித்ததால் சுமார் 5 முதல் 7 நாட்கள் வரை போராடி தீயணைக்கப்பட்டு வந்தது. தற்போது தீப்பிடித்த 2 நாட்களில் அணைத்ததால் குப்பை கிடங்கை சுற்றி உள்ள மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.



மறைந்த முதலமைச்சர் காமராஜர் வது பிறந்தநாளை ஒட்டி ஈரோடு அரசு ஆஸ்பத்திரி அருகே உள்ள காமராஜர் சிலைக்கு தமிழக செங்கொடி உழைப்பாளர்கள் சங்கத்தின் சார்பாக .மனோகரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் திருமுருகன் சுரேஷ் நகுலேஸ்வரன் பழனிச்சாமி பழனியப்பன் நல்லதம்பி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரியில்

# மனநலம் பாதித்த பெண்ணிடம் பாலியல்; குற்றவாளிக்கு குண்டாஸ்



கன்னியாகுமரி, ஜூலை. 16

நாகர்கோவில் என்ஜிஓ காலனி கீழவண்ணான்விளை பகுதியைச் சேர்ந்த சதாசிவம் என்பவரின் மகன் குமார் (49). இவர் மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டதாகக் கிடைத்த புகாரின் அடிப்படையில், கன்னியாகுமரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதையடுத்து வழக்கின் தீவிரத்தையும், பொதுமக்கள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு நலனையும் கருத்தில் கொண்டு, குற்றவாளி மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் பரிந்துரையின் பேரில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதாப் குற்றவாளி குமாரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க உத்தரவு பிறப்பித்தார். அதன்படி, தற்போது சிறையில் உள்ள குற்றவாளி மீது குண்டர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குமரி மாவட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான குற்றங்கள், பாலியல் குற்றங்கள், மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்து குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டு வருகின்றனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும் என்று காவல் கண்காணிப்பாளர் எச்சரித்துள்ளார்.



# நாகர்கோவில் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மாணவர் பேரவை விழா

## மாவட்ட ஆட்சித்தலைவர் பங்கேற்பு

நாகர்கோவில், ஜூலை. 17

கன்னியாகுமரி மாவட்டம் கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூரி மருத்துவமனை நாகர்கோவில் கோட்டாறு பகுதியில் உள்ளது. இந்த கல்லூரியில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பேரவை உறுப்பினர்கள் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்துகொண்டு மாணவ மாணவியர்களிடையே பேசியதாவது:

ஆயுர்வேதம், சித்த மருத்துவம் உள்ளிட்ட இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகள் தற்போதைய காலகட்டத்தில் முக்கியத்துவம் பெற்று வருகிறது. இந்த மருத்துவ முறைகளால் அறுவை சிகிச்சை இல்லாமல் நோய்களை சரிசெய்ய முடியும். நோய்கள் வந்த பிறகு குணப்படுத்துவதை விட, நோய் வருவதற்கு முன்பே ஆரோக்கியமான வாழ்வியலை மேற்கொள்வது ஆயுளை நீட்டிக்க உதவும். இதற்கு ஆயுர்வேதம், யுனானி மற்றும் சித்த மருத்துவம் போன்ற இந்திய மருத்துவ முறைகள் பெரும் பங்காற்றுகின்றன.

இந்த கல்லூரியில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பேரவை உறுப்பினர்கள் தங்களின் பதவியைப் பெரும் பொறுப்பாகக் கருத வேண்டும். உறுப்பினர்கள் தங்களின் தலைமை பண்பை வளர்த்துகொள்வதோடு, மாணவர்களின் நலனை ஆசிரியர்களிடம் கொண்டு சேர்க்கும் பாலமாக செயல்பட வேண்டும். மருத்துவர்களாகிய நீங்கள் நோயாளிகளிடம் அன்பாகவும் கனிவாகவும் உரையாடும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இக்கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தையும் தாண்டி பிற மாவட்டங்களை சேர்ந்த மாணவ மாணவியர்களும் ஆர்வமுடன் கல்வி கற்க வருகிறார்கள். அனைவரும் அலோபதி மருத்துவத்திற்கு இணையாக ஆயுர்வேத மருத்துவ சிகிச்சையில் சிறந்து விளங்க வேண்டுமென கேட்டுகொள்வதோடு, இப்பாரம்பரிய கல்லூரியில் பயில்வது ஒவ்வொருவருக்கும் பெருமையென உணர்ந்து சிகிச்சை முறையினை மேம்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு பேசினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் கோட்டார் அரசு ஆயுர்வேத கல்லூரி முதல்வர் மரு.கிளாரன்ஸ் டேவி, கல்லூரி மருத்துவர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



### குமரியில் இருந்து கேரளாவுக்கு

# மீன் வலைக்குள் மறைத்து மானிய மண்ணெண்ணெய் கடத்தல்; 2 பேர் கைது

நாகர்கோவில், ஜூலை. 17

குமரி மாவட்டம் வழியாக கேரள மாநிலத்திற்கு ரேஷன் அரிசி, மானிய விலை மண்ணெண்ணெய் உள்ளிட்ட பல பொருட்கள் கடத்தப்பட்டு வருவது தொடர்ந்து நடந்து வருகிறது. இதனை தடுக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. பறக்கும்படை அதிகாரிகள் தற்போது 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு இரவு சுமார் 10.45 மணியளவில் மாவட்ட பறக்கும் படை தனி வட்டாட்சியர் கெ எம் பாரதி தலைமையில், ஓட்டுனர் ஜாண் பிரைட் பறக்கும் படை குழுவினர்கள் மற்றும் நித்திரவிளை காவல் உதவியாளர் ராஜா ராபர்ட் உதவியுடன் கிள்ளியூர் வட்டார பகுதியில் கடத்தல் தடுப்பு ரோந்து பணியில் இருந்தனர். அப்போது விரிவிளை என்ற இடத்தில் சந்தேகத்திற்கு இடமாக வந்த வாகனத்தை சோதனை செய்ததில் அதில் பழைய மீன் வலையின் அடியில் 30 பிளாஸ்டிக் கேன்களில் சுமார் 1050 லிட்டர் மீனவர்களுக்கு மானியவிலையில் அரசால் வழங்கப்படும் வெள்ளை நிற மண்ணெண்ணெய் கேரளா மாநிலத்திர்க்கு கடத்தி செல்ல இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. கடத்தலில் ஈடுபட்ட குறும்பனையை சேர்ந்த சுதன் ராஜ் (38) மற்றும் குறும்பனையை சேர்ந்த ஷிபு (41) ஆகிய 2 நபர்களையும் மாவட்ட குடிமை பொருள் குற்றவியல் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. மண்ணெண்ணெய் தூத்தூர் சின்னதுறை அரசு கிட்டங்கியில் ஒப்படைக்கப்பட்டது.

# தஞ்சாவூர் பெரிய கோவில் 102 கண்காணிப்பு கேமராக்கள்

## முரசொலி எம்பி தொடங்கி வைத்தார்



தஞ்சாவூர் ஜூலை 17

தஞ்சாவூர் பெரிய கோவிலில் ரூபாய் 40 லட்சத்தில் பொருத்தப் பட்ட 102 கண்காணிப்பு கேமராக் களின்செயல்பாட்டை மக்களவை உறுப்பினர்முரசொலி தொடங்கி வைத்தார்.

தஞ்சாவூர் பெரிய கோவிலில் 6 ஆண்டுகளுக்கு முன் செயல்படுத் தப்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பழுதடைந்து செயல் இழந்தன இதனால் புதிய கேமராக்கள் பொருத்த பக்தர்கள் வலியுறுத் தினர்

இதன்படி ரூபாய் 40 லட்சத்தில் கோவிலின் நுழைவு வாயில் முதல் உள்பிரகாரம் முழுவதும், அனைத்து முக்கிய சன்னதிகள், திருசுற்று மண்டபங்கள் உள்ளிட்ட பகுதிக ளில் 102 கேமராக்கள் பொருத்தப் பட்டன

இவற்றில்2 கேமராக்கள் 360 டிகிரி கோணத்தில் சுழன்று கண் காணிக்கும் திறன் கொண்டவை இவற்றின் செயல்பாட்டை தஞ்சாவூர் தொகுதி மக்களவை உறுப்பினர் முரசொலி தொடங்கி வைத்து, தெரிவித்த தாவது:

இக்கோயில் பக்தர்களின் கோரிக்கையின்படி தொல்லியல் துறை அலுவலர்களிடம் வலியுறுத் தப்பட்டதன் விளைவாக இந்த 102 கண்காணிப்பு கேமராக்கள் பொருத் தப்பட்டுள்ளன

இதற்கான ஒப்பந்த புள்ளி விரைவில் கோரப்படவுள்ளது ,என்றார். முரசொலி நிகழ்ச்சியில் தொல்லியல் துறை திருச்சி மண்டல கண்காணிப்பாளர் அறவாழி, உதவி கண்காணிப்பு பொறியாளர்கள் உமேஷ், சரவணன், பெரிய கோயில் முதுநிலை பராமரிப்பு உதவியாளர் சோபிதா, முதுநிலை தோட்டக் கலை உதவியாளர் பாலசிங்கம் உள்ளிட்டோர் கலந்துகொள்ளனர்

### தமிழக வெற்றி கழகம் சார்பில்

# பெருகோப்பனப்பள்ளி ஊராட்சியில் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள்



கிருஷ்ணகிரி, ஜூலை. 17

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் மத்திய ஒன்றியம் பெருகோப்பனப்பள்ளி ஊராட்சியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் பெருகோப்பனப்பள்ளி கிராமத்தில் காமராசர் 124வது பிறந்த நாளை முன்னிட்டு காமராஜர் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் முரளிதரன் தலைமை தாங்கி தவெக கட்சி அலுவலகம் வளாகத்தில் கட்சி கொடியை ஏற்றி வைத்து தூய்மை பணியாளர்களுக்கு உபகரணங்கள், பள்ளி மாணவ மாணவிகளுக்கு பள்ளி உபகரணங்கள், மகளிருக்கு புடவைகள் ஆகிய நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் பர்கூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பசவராஜ், பர்கூர் மத்திய ஒன்றிய செயலாளர் சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெருகோப்பனப்பள்ளி ஊராட்சி சேர்ந்த மத்திய ஒன்றிய இளைஞரணி நிர்வாகி மனோஜ் குமார், ஒன்றிய துணைச் செயலாளர் அஜித்குமார், கிளைச் செயலாளர் சுரேஷ், கிளை இணைச் செயலாளர் சதீஷ் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சத்யராஜ், தகவல் தொழில்நுட்ப அணி சேலம் மண்டல இணை ஒருங்கிணைப்பாளர் ஜெயசூர்யா, பர்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் புஷ்பராஜ், பர்கூர் நகர செயலாளர் பிரித்திவிராஜ், அசோகன் மற்றும் மத்திய ஒன்றிய இணைச் செயலாளர் ஹேமானந்தன், மத்திய ஒன்றிய துணைச் செயலாளர் பத்மா, கோவிந்தசாமி, மாவட்ட நிர்வாகிகள்,ஒன்றிய நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



### பாரூர் ஏரியிலிருந்து

# 2ம் போக பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி, ஜூலை 17

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியை அடுத்த பாரூர் பெரிய ஏரியிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு பிரதான காலவாய்களில் முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது.

இதன் மூலம் 2397 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் 2026ம் ஆண்டு ஜூலை 16 முதல் நவம்பர் மாதம் 22ம் தேதி வரை 130 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதற்காக இன்று காலை பாரூர் ஏரியின் மதகை மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார், மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராஜ் (அதிமுக) கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் (தவெக) தெற்கு ஒன்றிய செயலாளர் இரவிச்சந்திரன் (தவெக) ஆகியோர் மலர் தூவி திறந்து வைத்தனர்.

அதன்படி பாரூர் பெரிய ஏரியில் இருந்து கிழக்கு மற்றும் மேற்கு பிரதான கால்வாய்களின் மூலம் முதல் 5 நாட்களுக்கு நாற்றுவிட தண்ணீர் விட்டும் பிறகு முறை பாசனம் மூலம் 3 நாட்கள் மதகை திறந்துவிட்டும், 4 நாட்கள் மதகை மூடி வைத்தும் சுழற்சி முறையில் நாள் ஒன்றுக்கு 6.00 மில்லியன் கனஅடி வீதம் 16.07.2026 முதல் 22.11.2026 வரை மொத்தம் 130 நாட்களுக்கு 2397 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வகையில் 361 மில்லியன் கன அடிக்கு மிகாமல் முதல் போக பாசனத்திற்கு நீர் இருப்பு மற்றும் நீர் வரத்தினை பொறுத்து தேவைக்கேற்ப தண்ணீர் திறந்துவிட ஆட்சியர் உத்திரவிட்டு,

விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமென மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் விவசாயிகளிடம் கேட்டுக்கொண்டார் இதில் ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் திருமால் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டுள்ளனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

17.07.2026

# இந்திய கடல்சார் பல்கலைக்கழக புத்தாக்க தொழில்முனைவு ஆராய்ச்சி மையம் தொடக்கம்




சென்னை, ஜூலை 17

இந்திய கடல்சார் பல்கலைக்கழக புத்தாக்க தொழில் முனைவு ஆராய்ச்சி மையத்தை சென்னை செம்மஞ்சேரியில் உள்ள தலைமையகத்தில் அதன் துணைவேந்தர் டாக்டர் மாலினி வி. சங்கர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள இந்த கடல்சார் புத்தாக்க மையம் மாணவர்கள், கடல்சார் துறை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வளரும் தொழில்முனைவோர் மத்தியில் கடல்சார் கண்டுபிடிப்பு, தொழில் முனைவு மற்றும் நிறுவன மேம்பாட்டை வளர்ப்பதற்கான ஒரு பிரத்யேக தளமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

புத்தாக்க தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதும், தொழில்துறை சவால்களுக்கு புதுமையான தீர்வுகளை ஊக்குவிப்பதும், மாலுமிகள், துறைமுக வல்லுநர்கள், தொழில்துறை பங்குதாரர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி அமைப்புகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

மேலும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தால் நடத்தப்பட்ட ஹேக்கத்தான் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து புத்தாக்க தொழில்நிறுவனங்களிடம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் இணைத் துணைவேந்தர்டாக்டர்ஸ்ரீராஜூபாலாஜி வழங்கினார். துணைவேந்தர் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆரம்ப நிதியுதவியாக ரூ. 60 லட்சத்துக்கான காசோலைகளை வழங்கினார். இந்தத் திட்டத்தின் ஒட்டுமொத்த மதிப்பு சுமார் ரூ. 5 கோடி ஆகும்.

தொடக்க விழாவில் மெரிடைம் இந்தியா பவுண்டேஷன் நிர்வாக இயக்குனர் விஸ்வநாதன், இந்திய கடல்சார் பல்கலைக்கழக இணைத் துணைவேந்தர் டாக்டர் ஸ்ரீ ராஜூ பாலாஜி, பல்கலைக்கழக புத்தாக்க தொழில்முனைவு ஆராய்ச்சி மைய இயக்குனர் டாக்டர் ஒய்.வி.வி.எஸ்.என்.மூர்த்தி, மற்றும் ஐஐடி மெட்ராஸ் பேராசிரியர் டாக்டர் முரளி ஆகியோருடன் கல்வித்துறை மற்றும் கடல்சார் துறையைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொடக்கவிழாவில் உரையாற்றிய இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் மாலினி வி. சங்கர் கூறியதாவது :

இப்பல்கலைக்கழகபுத்தாக்கதொழில் முனைவு ஆராய்ச்சி மையம்அமைப்பது போன்ற முயற்சிகள், உலகளாவிய கடல்சார் தலைமையாக உருவெடுக்கும் இந்தியாவின் தொலைநோக்கு இலக்குகளுக்கு பெரும் பங்காற்றும் அதே வேளையில், கடல்சார் தொழில்துறைக்கான தீர்வுகளை உருவாக்க இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கு அதிகாரமளிக்கும் என்றார். மேலும்மத்தியதுறைமுகங்கள், கப்பல்போக்குவரத்துமற்றும்நீர்வழிகள் அமைச்சகத்தால் தூண்டப்பட்டு, ஐஐடி மெட்ராஸ், ஐஐடி பாம்பே மற்றும் சென்னை துறைமுகம் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களின் ஆதரவுடன் ஓராண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக இந்தப் புதிய கடல்சார் புத்தாக்க தொழில் முனைவு ஆராய்ச்சி மையம் அமைந்துள்ளது என்று துணைவேந்தர் தெரிவித்தார்.

# கணியூரில் த.வெ.க.வினர் இடையே தள்ளுமுள்ளு

## வீடியோ வைரலான நிலையில் சூலூர் எம்.எல்.ஏ. விளக்கம்



கோவை ஜூலை:17

கோவை மாவட்டம் கணியூரில் தமிழக வெற்றி கழகத்தினர் இடையே ஏற்பட்ட தள்ளுமுள்ளு குறித்து சூலூர் சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ. சுகுமார் விளக்கம் அளித்துள்ளார்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் சூலூர் தொகுதியில் வெற்றி பெற்ற தமிழக வெற்றி கழகத்தின் எம்.எல்.ஏ.சுகுமார், தொகுதிமக்களுக்குநன்றிதெரிவிக்கும் பயணத்தை மேற்கொண்டு வருகிறார். நேற்றிரவு அவர் கணியூர் பகுதிக்குச் சென்றபோது, கட்சியினர் இடையே கூட்ட நெரிசலில் திடீரென தள்ளுமுள்ளு ஏற்பட்ட நிலையில் பெண் ஒருவர் தாக்கப்பட்டதாக தெரிகிறது. இதன் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலான நிலையில், இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து சூலூர் தொகுதி எம்.எல்.ஏ. சுகுமார் செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறுகையில், தமிழக முதல்வர் விஜய் தலைமையிலான நமது கட்சியின் சார்பில் இந்தத் தொகுதியில் வேட்பாளராக நின்று வெற்றி பெற்றதற்காக, ஒவ்வொரு கிராமமாகச் சென்று பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்து வருகிறேன். அதன்படி நேற்றிரவு கணியூர் கிராமத்திற்குச் சென்றபோது அங்கு கூட்டம் அதிகமாக இருந்தது. எனக்கு மாலை அணிவிக்கும் போது கூட்ட நெரிசலில் லேசான தள்ளுமுள்ளு ஏற்பட்டதாகக் கூறினர். ஆனால்,நான் அந்த இடத்தைக் கடந்து சுமார் நான்கு அல்லது ஐந்து கிலோமீட்டர் தூரம் சென்ற பிறகுதான் இப்படி ஒரு சம்பவம் நடந்ததாக எனக்குத் தகவல் தெரிவித்தனர். உடனடியாக நான் திரும்பி வருவதாகக் கூறினேன். தற்போது அந்தப் பெண்ணிடம் பேசி விசாரித்தோம். அவருக்குத் தொண்டை வலி இருப்பதாகவும், இரண்டு நாட்கள் கழித்து நேரில் வந்து சந்திப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தேர்தலுக்கு முன்பு கூட்டத்தோடு கூட்டமாக அவர் வருவார். மற்றபடி அவர் என்னை நேரில் சந்தித்துப் பேசியதில்லை. இருப்பினும் அவருக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் செய்து தருவதாகக் கூறியுள்ளேன். இந்தச் சம்பவத்தை வைத்து, கட்சியில் ஏதோ கோஷ்டிப் பூசல் இருப்பது போன்ற மாயையை உருவாக்கவும், தேவையற்ற பிரச்சினையை ஏற்படுத்தவும் சிலர் முயற்சிக்கின்றனர். கட்சியில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை,எல்லாம் வழக்கம் போல் சீராகச் சென்று கொண்டிருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் (17.07.2026)




உங்களது அழகான தோற்றமும் பேச்சும் மற்றவர்களை எளிதில் ஈர்க்கும். பணியிடத்தில் நீங்கள் செய்யும் கடின உழைப்பு எதிர்காலத்தில் பெரிய பலனைத் தரும். தேவையற்ற பண விரயங்களைத் தவிர்க்க இன்று செலவுகளில் கொஞ்சம் கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.




நீண்ட நாட்களாகத் தள்ளிப்போன காரியங்கள் இன்று சாதகமாக முடியும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் அல்லது புதிய வாய்ப்புகள் கிடைக்கக்கூடும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடித்தால் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழலைத் தக்க வைக்கலாம்.





வேலைப்பளு சற்று அதிகமாகத் தோன்றினாலும், உங்கள் உழைப்பிற்கேற்ற நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய முதலீடுகளைத் திட்டமிடும்போது ஒருமுறைக்கு இருமுறை யோசித்து முடிவெடுக்கவும்.




குடும்பத்தில் மகிழ்ச்சியான மற்றும் சுப நிகழ்ச்சிகள் பற்றிய பேச்சுகள் வரலாம். வீடு, நிலம் சார்ந்த சொத்து விவகாரங்களில் சாதகமான திருப்புமுனை ஏற்படும். மன அமைதியும் தைரியமும் கூடும் நாளாக அமையும்.




உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் அல்லது பதவி உயர்வுக்கான அறிகுறிகள் தென்படும். நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களின் ஆதரவு உங்களுக்குப் பக்கபலமாக இருக்கும். வாகனப் பயணங்களின் போது கவனமாக இருப்பது அவசியம்.




பொருளாதார நிலை உயரும், பணவரவு திருப்திகரமாக இருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நீங்கள் போடும் புதிய திட்டங்கள் வெற்றியைத்தரும். உறவினர்களுடனான கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை பலப்படும்.




இன்று நீங்கள் எதையும் சாதிக்கும் துணிச்சலோடு செயல்படுவீர்கள். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள், அதற்குரிய பலனும் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.




சந்திராஷ்டமம் இன்று உங்கள் ராசிக்கு சந்திராஷ்டமம் இருப்பதால் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய நாள். புதிய தொழில் முதலீடுகள், முக்கிய ஒப்பந்தங்கள் மற்றும் நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும்போது தேவையற்ற வாக்குவாதங்களை எக்காரணம் கொண்டும் வளர்க்க வேண்டாம்.




உங்களது முயற்சிகளுக்கு இருந்த தடைகள் அனைத்தும் விலகும். கடன் தொல்லைகள் குறைந்து நிம்மதி ஏற்படும். குடும்ப உறுப்பினர்களுடன் இருந்த மனஸ்தாபங்கள் நீங்கி, இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்.




குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் ஆதரவும் ஆசியும்உங்களுக்குக்கிடைக்கும்.பணியிடத்தில் சவாலான வேலைகளையும் உங்கள் சமயோசித புத்தியால் எளிதாக முடிப்பீர்கள். புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




தொழிலில் நல்ல முன்னேற்றமும், கீழ்நிலை ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். அரசாங்க வழியில் எதிர்பார்த்த உதவிகள் சாதகமாக முடியும். ஆரோக்கியத்தில் சிறு கவனம் செலுத்துவது நல்லது.




வாக்கு வன்மையால் பல காரியங்களை இன்று சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களோடு இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். மாணவர்களுக்கு உயர்கல்வி கற்பதில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

# மயானத்தில் காற்று வாங்கும் புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகள்



நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட டபுள் ரோடு பகுதியில் உள்ள மயானத்தில் காட்டேரி, பால்காரன் லைன், கிளண்டல், டேன்டீ பகுதிகளை சேர்ந்த மக்கள் இங்குள்ள மயானத்தை தான் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மயானம் நாளுக்கு நாள் முட்புதர்கள் சூழ்ந்து இருப்பதால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்ய வரும் நபர்கள் ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்ட உடல்களை எடுத்து வீசி விட்டு புதியதாக வந்த உடலை புகைத்து வருவதாக கூறப்படுகிறது. இதனால் வெளியே வீசப்பட்ட உடல்கள் எலும்புக்கூடுகளாக ஆங்காங்கு சிதறி கிடக்கிறது. இது போன்ற சூழல் ஏற்பட காரணம் குழி தோண்டும் தொழிலாளர்களா? அல்லது கரடிகளா? என தெரியாமல் மக்கள் குழப்பத்தில் உள்ளனர்.

இந்த மயானத்தில் வெளியே வீசப்படும் எலும்பு கூடுகலால் துர்நாற்றம் வீசி வருவதுடன், மயானத்திற்கு வரும் மக்கள் மத்தியிலும் பீதியை ஏற்படுத்தியுள்ளது எனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இது குறித்து ஆய்வு செய்து மயான பகுதியை ஆக்கிரமித்துள்ள முட்புதர்களை அகற்றி வெளியே தூக்கி வீசப்பட்டுள்ள எலும்புக்கூடுகளை புதைத்து மக்களுக்கு அச்சம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அன்று மெஸ்ஸியின் கையில் குழந்தையாக....இப்போது களத்தில் எதிராக..சுவாரசிய மாற்றம்




2007ஆம் ஆண்டு, பார்சிலோனா கால்பந்து கிளப்பும் யுனிசெஃப் (UNICEF) அமைப்பும் இணைந்து வெளியிட்ட நன்கொடை காலண்டருக்காக நடைபெற்ற புகைப்படப்பிடிப்பில், அப்போதைய 20 வயதான லியோனல் மெஸ்ஸி, 6 மாதக் குழந்தையான லமின் யமாலை குளிப்பாட்டும் புகைப்படம் எடுக்கப்பட்டது. அந்தக் குழந்தைதான் இன்று ஸ்பெயின் அணியின் நட்சத்திர வீரர் லமின் யமால். புகைப்படக் கலைஞர் ஜோன் மான்போர்ட் எடுத்த அந்தப் புகைப்படம், 2024ல் மீண்டும் வைரலானது.

2026 உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் அர்ஜென்டினா ஸ்பெயின் அணிகள் மோதுகின்றன. 2007ஆம் ஆண்டு, உலக கால்பந்துநட்சத்திரம்லியோனல்மெஸ்ஸியின்கையில்குழந்தையாக இருந்த லமின் யமால், இன்று ஸ்பெயின் அணியின் நட்சத்திர வீரராக உருவெடுத்து, உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் மெஸ்ஸிக்கு எதிராக களமிறங்க உள்ளார்.

ஒரு வைரல் புகைப்படத்தில் தொடங்கிய இந்த அபூர்வமான தொடர்பு, 19 ஆண்டுகளுக்குப் பிறகு கால்பந்து வரலாற்றின் மிகவும் உணர்வுபூர்வமான மற்றும் சுவாரசியமான தருணங்களில் ஒன்றாக மாறியுள்ளது.

# ஜப்பான் ஓபன் பேட்மிண்டன்: பி.வி.சிந்து காலிறுதி சுற்றுக்கு முன்னேற்றம்



ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டி டோக்கியோவில் நடந்து வருகிறது.

இந்தியா சார்பில் முன்னணி வீரர், வீராங்கனைகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். , இன்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி.சிந்து, சீனாவின் ஹான் யூ உடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய பி.வி.சிந்து 2116, 2114 என்ற செட் கணக்கில் வென்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

முன்னதாக, இந்தியாவின் லக்சயா சென், ஆயுஷ் ஷெட்டியும், உன்னதி ஹூடா ஆகியோர் முதல் சுற்றிலேயே தோல்வி அடைந்து தொடரில் இருந்து வெளியேறினர்.

# கோலி, ஷ்ரேயாஸ் அரைசதம்: இங்கிலாந்து அணிக்கு 234 ரன்கள் இலக்கு நிர்ணயித்த இந்தியா




இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் பர்மிங்காமில் நடந்த தொடக்க ஆட்டத் தில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 10 என முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இந்தியா இங்கிலாந்து இடை யிலான 2வது ஒருநாள் போட்டி கார்டிப்பில் உள்ள சோபியா கார்டன் ஸ்டேடியத்தில் இன்று (வியாழக்கிழமை) நடக்கிறது.

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணியின் கேப்டன் ஹாரி புரூக் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது.

தொடக்கத்தில் ரோகித் சர்மா, கில் இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடி ரன்கள் குவித்தனர். கில் 31 ரன்களில் வெளியேறினார். தொடர்ந்து ரோகித் சர்மா 26 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் இஷான் 1 ரன், வாஷிங்டன் சுந்தர் 2 ரன், அக்சர் படேல் 1 ரன் என அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இருப்பினும் விராட் கோலி, ஷ்ரேயாஸ் அய்யர் இருவரும் நிலைத்து விளையாடி ரன்கள் குவித்தனர். பொறுப்புடன் விளையாடி இருவரும் அரைசதம் அடித்தனர்.

விராட் கோலி 65 ரன்களுக்கும், ஷ்ரேயாஸ் அய்யர் 66 ரன்களுக்கும் ஆட்டமிழந்தனர்.இதனால் 44 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 233 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இங்கிலாந்து அணியில் ஆர்ச்சர், அட்கின்சன் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

# அருள்நிதியின் "டிமான்டி காலனி 3" படத்திற்கு "ஏ" சான்றிதழ் வழங்கிய தணிக்கை வாரியம்




அருள்நிதியின் 'டிமான்ட்டி காலனி 3' படத்திற்கு தணிக்கை வாரியம் "ஏ" சான்றிதழ் வழங்கியுள்ளது.

அருள்நிதி நடிப்பில் கடந்த 2015ம் ஆண்டு வெளியான படம் 'டிமான்ட்டி காலனி 2'. இந்த படத்தை அஜய் ஞானமுத்து இயக்கியிருந்தார். ஹாரர் திரில்லர் கதைகளத்தில் வெளியான இந்த படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. அதைத்தொடர்ந்து கிட்டத்தட்ட 10 வருடங்கள் கழித்து 'டிமான்ட்டி காலனி' படத்தின் இரண்டாம் பாகம் வெளியானது.

அஜய் ஞானமுத்து இயக்கிய 'டிமான்ட்டி காலனி 2' படத்தில் அருள்நிதி, பிரியா பவானி சங்கர், அருண்பாண்டியன், விஜே அர்ச்சனா, மீனாட்சி கோவிந்தராஜன், முத்துக்குமார் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இந்த படமும் நல்ல வரவேற்பை பெற்றது.

அதனை தொடர்ந்து தற்போது 'டிமான்ட்டி காலனி' படத்தின் 3ம் பாகம் உருவாகியுள்ளது. விறுவிறுப்பாக நடைபெற்று வந்த இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்து, ரிலீசுக்கான வேலைகள் வேகமாக நடைபெற்று வந்தன.

இப்படத்தின் சாட்டிலைட் மற்றும் ஓடிடி உரிமத்தை ஜீ5 நிறுவனம் ரூ. 50 கோடிக்குக் கைப்பற்றியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், இதுவே அதிக ஓடிடி தொகைக்கு விற்பனையான முதல் தமிழ் ஹாரர் திரைப்படம் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. முதல் மற்றும் இரண்டாம் பாகங்களுக்குக் கிடைத்த வரவேற்பு காரணமாக 3 ஆம் பாகத்தின் வெளியீட்டுக்கும் எதிர்பார்ப்பு இருக்கிறது.

'டிமான்டி காலனி 3' திரைப்படம் வருகிற செப்டம்பர் 10 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இந்த நிலையில், படம் வெளியாக இன்னும் இரண்டு வாரங்களே உள்ள சூழலில், மத்திய திரைப்பட தணிக்கை வாரியம் 'டிமான்டி காலனி 3' திரைப்படத்திற்கு 'ஏ' (Adults Only) சான்றிதழ் வழங்கியுள்ளது. இதனால், வன்முறை நிறைந்த ஆக்சன் திரைப்படமாக 'டிமான்டி காலனி 3' ரசிகர்களை திரையரங்குகளில் சந்திக்க தயாராகியுள்ளது.

# கிஷன் தாஸின் "சீ யூ" படத்தின் டீசரை வெளியிட்ட தனுஷ்

அறிமுக இயக்குநர் சந்தோஷ் ஸ்ரீவஸ்டன் இயக்கத்தில் உருவாகி வரும் புதிய திரைப்படத்திற்கு 'சீ யூ' எனப் பெயரிடப்பட்டுள்ளது. காதல் கதைக்களத்தில் உருவாகும் இந்தப் படத்தில் கிஷன் தாஸ் கதாநாயகனாகவும், சஞ்சனா கிருஷ்ணமூர்த்தி கதாநாயகியாகவும் நடித்துள்ளனர். ஏஆர் என்டர்டெயின்மென்ட்ஸ் மற்றும் டி ஸ்டூடியோஸ் இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு ஜுனம் இசையமைத்துள்ளார்.

நடிகர் கிஷன் தாஸ், சமீபத்தில் வெளியான 'ஆரோமலே' திரைப்படத்தின் மூலம் ரசிகர்களிடையே கவனம் பெற்றார். அதேபோல், நடிகைசஞ்சனாகிருஷ்ணமூர்த்தி 'லப்பர்பந்து' திரைப்படத்தின்மூலம்பிரபலமானார். மேலும், கமல்ஹாசன் நடித்த 'தக் லைப்' படத்தில் உதவி இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். அண்மையில் அவர் நடித்த 'பரிமளா அண்ட் கோ' திரைப்படமும் வெளியாகி இருந்தது.

'சீ யூ' திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை சமீபத்தில் நடிகர் ஆர்யா தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டார். அந்த போஸ்டர் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. இதையடுத்து, படத்தின் வெளியீட்டு தேதி குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என ரசிகர்கள் எதிர்பார்த்து வருகின்றனர்.

இந்த நிலையில், 'சீ யூ' திரைப்படத்தின் டைட்டில் டீசரை நடிகர் தனுஷ் வெளியிட்டுள்ளார்.

# சூர்யாவின் 47வது திரைப்படத்தின் படப்பிடிப்பு நிறைவு

'கருப்பு' திரைப்படத்தை தொடர்ந்து நடிகர் சூர்யா 'விஸ்வநாதன் அண்ட் சன்ஸ்', 'சூர்யா 47' ஆகிய படங்களில் ஒப்பந்தமானார். இதில், வெங்கட் அட்லூரி இயக்கிய 'விஸ்வநாதன் அண்ட் சன்ஸ்' ஆகஸ்ட் 14 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான சூர்யா, பிரபல மலையாள இயக்குனர் ஜித்து மாதவன் இயக்கத்தில் தனது 47வது படத்தில் நடித்து வருகிறார். தற்காலிகமாக 'சூர்யா 47' என அழைக்கப்படும் இந்த படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த படத்தில் சூர்யாவுடன் மலையாள நடிகர் நஸ்லேன் மற்றும் நடிகை நஸ்ரியா நசீம் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். மேலும், இசையமைப்பாளர் சுஷின் ஷ்யாம் இசையமைக்கிறார்.

'ஆவேஷம்' திரைப்படத்தின் வெற்றிக்குப் பிறகு ஜித்து மாதவன் இயக்கும் இந்த படத்தில் சூர்யா எந்த மாதிரியான கதாபாத்திரத்தில் நடிக்கிறார் என்பது குறித்து ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பு நிலவுகிறது. இதற்கிடையில், படத்தில் சூர்யா போலீஸ் அதிகாரியாக நடிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சூர்யாவின் தயாரிப்பு நிறுவனமான 2டி என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் உருவாகி வரும் இந்த திரைப்படத்தின் படப்பிடிப்பு தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. சென்னை நகரில் நடைபெற்று வரும் இறுதி கட்ட படப்பிடிப்பு இம்மாத இறுதிக்குள் நிறைவடையும் என தகவல் வெளியானது.

இந்நிலையில், சூர்யாவின் 47வது படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்ததாக படக்குழு வீடியோ வெளியிட்டு அறிவித்துள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.